REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 14உ வியாழன் (27—1—55) ★ ★ வெளியூர்: தை 15உ வெள்ளி (28—1—55) [இதழ் 193

மந்திரிகளே இல்லாத மாநிலத் தலைநகரம்

ரீவா, ஜன. 26—

விந்தியப் பிரதேச மாநிலத் தலைநகரான ரீவாவில் மூன்று நாட்கள் தொடர்ந்து ஒரு மந்திரிகூட இருக்கவில்லையாம். முதன் மந்திரி ஷம்புநாத் சுக்லா, தொழில் மந்திரி தின்பகதூர்சிங், சட்ட மந்திரி ஜி. என். சிங் ஆகியோர் ஆவடி காங்கிரசுக்கு சென்றுவிட்டனர். உள்நாட்டு மந்திரி திருவனந்தபுரத்தில் நடைபெறும் சுகாதார மந்திரிகள் மாநாட்டிற்குச் சென்றுவிட்டார். மாநில உப தேர்தல் ஒன்றுக்காக, மால்ஹெரா தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்ய நிதி மந்திரியான எம். கே. மகாவ் சென்றுள்ளார்.

இதனால், மூன்று நாட்களாகத் தலைநகரில் எந்த மந்திரியுமே இருக்கவில்லை.

'சுதந்திர சீக்கிய நாடு வேண்டும்'

'மொழிவழி மாநிலத்துடன் திருப்தியடையமாட்டோம்'

'இந்துக்களைப் போலவே எல்லா உரிமைகளும் தேவை'

'எவர் ஒப்பாவிட்டாலும் தனி நாடு பெற்றே தீருவோம்; தீவிர இயக்கம் நடத்துவோம்'

அகாலி தள தலைவர் தாராசிங் போர் முரசு

சாந்திகார், ஜன. 26—

"முழு சுதந்திரம் பெற்ற பஞ்சாப் நாடு எங்களுக்கு வேண்டும்; மொழிவழியாகக் கிடைக்கக்கூடிய மாநிலம் மட்டும் கொண்டு சீக்கியர்கள் திருப்தியடைந்துவிடமாட்டார்கள்; இந்துக்களைப் போல சீக்கியர்களும் சமமான உரிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும்;

"பஞ்சாப் மொழி பேசுகிற சீக்கிய நாடு அமைவதற்கு சர்க்கார் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்—இந்துக்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்—என்றாலும், நாங்கள் சீக்கிய நாடு பெற்றே தீருவோம்; மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை சீக்கிய நாடு அமைக்கும் கோரிக்கையை உள்ளடக்கியதாக இல்லாவிட்டால், அந்த அறிக்கையை நிராகரித்து சீக்கிய நாடு காண தீவிரமான இயக்கம் நடத்துவோம்,"

—என்று, பஞ்சாபில் உள்ள சீக்கியர் இயக்கமான அகாலி தளத்தின் தலைவர் மாஸ்டர் தாரா சிங் குறிப்பிட்டிருப்பதாக செய்தி வெளிவந்துள்ளது.

குருத்துவார் சட்டத்தை அமுல் செய்வது பற்றி பஞ்சாப் முதன்மந்திரி பீம்சேன் சாச்சாருடன், மாஸ்டர் தாராசிங் பேச்சு வார்த்தைகள் நடத்தியதாகவும் அப்போதுதான் இத்தகவலை அவர் வெளியிட்டதாகவும் கூறப்படுகிறது.

பெருவாரியான சீக்கியர்கள் வாழும் இடங்களை ஒன்று சேர்த்து, மொழிவழியாக, பஞ்சாப் மாநிலம் ஒன்று அமைத்துவிட்டால், அதுவே போதுமென சீக்கியர்கள் திருப்தி அடைந்துவிடமாட்டார்கள் என்றும், அவர்கள், சீக்கியர்கள் பெருவாரியாக வாழும் இடத்தைக் கொண்ட 'சுதந்திர' சீக்கிய நாடு வேண்டும் என்று கோருவதாகவும், மாஸ்டர் தாரா சிங்கை முதன் மந்திரி சந்தித்த பிறகு, சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

குருத்துவார் சட்டத்தை அமுல் செய்வதற்காக சுமார் 150 நிமிடங்கள் பேச்சுவார்த்தைகள் நடந்தும் முடிவேதும் எடுக்கப்படவில்லை

மாஸ்டர் தாராசிங் முழு உரிமையும், சுதந்திரமும் கொண்ட சீக்கிய நாடு கேட்பது தனக்கு ஆச்சரியத்தையும் ஏமாற்றத்தையும், அளிப்பதாயிருந்ததாக, முதன் மந்திரி பீம்சேன் சாச்சார் கூறியிருக்கிறாராம்.

மணிக்கு 60 மைல் வேகமும், பெட்ரோல் ஒரு காலனுக்கு 40 மைல் தூரமும் போகக்கூடிய நான்கு பேருக்கான புதிய கார் ஒன்றை ரஷ்யர்கள் கண்டுபிடித்துள்ளார்களாம்.

இராணுவ பலத்தால் சமாதானம் நிலவுமா?

அது வெறும் கனவேதான்!

விநோபா பாவேயின் கருத்து

"இராணுவ வலிமையின் மூலமே உலகில் சமாதானத்தை நிலைநாட்டிவிடலாமென்பது வெறும் கனவே ஆகும்; சமாதானத்தின் சக்தியை சமுதாயம் நன்றாக உணர்ந்துகொண்டாலொழிய சமாதானம் ஏற்பட்டுவிட முடியாது. சமாதானத்தின் சக்தியை நிலைநிறுத்துவதுதான் பூமிதான இயக்கமாகும்.

"சமாதானம் நிலவினால்தான் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றி தேசத்தின் செல்வத்தைப் பெருக்க முடியும் என்பதற்காக மட்டும் சமாதானம் வேண்டுமென்று கோரக்கூடாது."

இவ்வாறு மிதுனபுரியில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டமொன்றில் பேசுகையிலேயே ஆச்சாரியா விநோபா பாவே கூறியிருக்கிறார்.

பட்டம் தாணுவை ஆதரிக்க கம்யூனிஸ்டுகளின் நிபந்தனைகள்

தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்கின்றனர்!

திரு—கொச்சி அரசியலில் நெருக்கடி வளருகிறது

திருவனந்தபுரம், ஜன. 26—

"அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்; அரசியல் ஊழியர்கள்மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும்; நில சீர்திருத்த மசோதா சட்டமாகிற வரையில், விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுக்க வேண்டும்; சில போலீசார்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்பன போன்ற தங்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டால், பட்டம் தாணுவின் மந்திரி சபையை தாங்கள் ஆதரிப்பதாக திரு-கொச்சி கம்யூனிஸ்டு கட்சி கூறுவதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

பட்டம் மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை, திரு. த. நா. காங்கிரஸ் தலைவர் ஏ. சிதம்பர நாடார் கொண்டுவந்துள்ளார். இது, திரு-கொச்சி அரசியலில் நெருக்கடியை உண்டுபண்ணுவதாயுள்ளதாம்.

காங்கிரஸ் தலைவரான பனம்பள்ளி கோவிந்தமேனன், தீர்மானத்திற்கு எதிராகவோ அல்லது ஆதரித்தோ வாக்களிப்பது பற்றி காங்கிரஸ் இன்னும் முடிவேதும் செய்யவில்லை என்று கூறியிருக்கிறாராம்.

இன்று கூடவிருந்த மாநில கம்யூனிஸ்டு கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நம்பூதிரிபட் வந்துள்ளார் என்றும் தெரிகிறது.

ம. சோ. கட்சியினரும் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம்.

"தென்னாப்பிரிக்கா, இந்தோனேஷியாவில் நடைபெறவிருக்கும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டிற்குப் பார்வையாளர்களை அனுப்பிவைக்காது" என்று, எரிக் லௌ என்ற வெளிநாட்டிலாகா மந்திரி கூறியிருக்கிறார்.

சாதி இந்துக்களின் பழமை வெறி

குலத் தொழிலைச் செய்ய மறுத்தோரை பட்டினி போட்டனர்

ஜோத்பூர், ஜன. 26—

'பாம்பி' என்ற வகுப்பினரை சாதி இந்துக்கள் சமூகக் கட்டுப்பாடு செய்து ஒதுக்கி வைத்ததினால், ஜோத்பூருக்கு அருகிலிருக்கும் 'மதானியா' எனும் இடத்தில் அவர்கள் பட்டினியால் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது.

தலைமுறை தலைமுறையாக, 'பாம்பி' வகுப்பினர் செய்துவந்த பரம்பரைத் தொழிலை, அவர்கள் இப்போது செய்ய மறுத்து வருகின்றனர். செத்த மிருகங்களை நகரத்திலிருந்து அப்புறப்படுத்த அவர்கள் மறுத்தனராம். அதனால், அவர்களைத் தண்டிக்க எண்ணிய சாதி இந்துக்கள், கட்டுப்பாடாக, உணவுப் பொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்களை அவர்களுக்குத் தராது கட்டுப்பாடு செய்துவிட்டனர் என்றும், இதனால் அந்த வகுப்பினர் பட்டினியால் வாட வேண்டியிருந்தது என்றும் தெரிகிறது.

மார்வாரி கதர் சங்கத்தார் விரைந்து சென்று, பட்டினியால் தவிப்போருக்கு உணவுப்பொருள்களைத் தந்து காப்பாற்றி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

போலீசாரைத் தாக்கிய அகதிகள்

கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்து கலைக்கப்பட்டனர்!

25 பேர் கைது: பலருக்குக் காயம்

கல்கத்தா, ஜன. 26—

தங்களைத் தாக்கிய அகதிக் கூட்டமொன்றைக் கலைக்க போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தும் பயனற்றுப்போய் இரு முறை கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ததாகத் தகவல் கிடைத்துள்ளது.

இந்தச் சம்பவம் பர்கானா மாவட்டத்தில் உள்ள 'சாலா' எனும் கிராமத்தில் நடைபெற்றதாம்.

போலீசார், வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ள சிலகைதிகளைக் கைது செய்ய அந்தக் கிராமத்திற்குச் சென்றார்களாம். இதைக் கேட்டு ஆத்திரமடைந்த அகதிகள் பெருங்கூட்டமாகச் சேர்ந்து போலீசாரைச் சூழ்ந்துகொண்டு கற்களால் தாக்க முற்பட்டனராம். இந்தக் குழப்பத்தில் இரண்டு போலீசார் உட்பட ஆறுபேர் காயப்பட்டனர் என்றும், கண்ணீர்ப்புகைப் பிரயோகத்திற்குப் பின் சுமார் 25 பேர்களை போலீசார் கைது செய்திருப்பதாயும் தெரிகிறது.

பெற்றோருக்கு 'புத்தி' புகட்டும் சினிமா!

புதுடில்லி, ஜன. 26—

பெற்றோர் தங்கள் குழந்தைகளை துன்புறுத்தாது, தண்டிக்காது, அடிக்காது இருக்குமாறு அவர்களுக்கு 'புத்தி புகட்டுகிற' வகையில் சினிமா படம் காட்டுங்கள் என்று ஒரு குழந்தை திருமதி இந்திரா காந்திக்கு எழுதியிருந்ததல்லவா?

அக்குழந்தையின் ஆவலைப் பூர்த்தி செய்கிற வகையில் குழந்தைகள்தான் உலகத்திலேயே மிக முக்கியமானவர்கள் என்று எடுத்துக் காட்டும் படம் ஒன்று வரவிருக்கிறதாகத் தெரிகிறது.

அந்தப் படம், பெற்றோர்கள் செய்ய வேண்டியன — செய்யக் கூடாதன என்னும் வகையில் சில கருத்துக்களைக் கூறுகின்றதாம்.

திருவிழா விளையாட்டுகளை எதிர்த்து எம். எல். ஏ. உண்ணாவிரதம்

நாட்டிய நிகழ்ச்சி கூடாதென கம்யூனிஸ்டுகள் ஆர்ப்பாட்டம்

போபால், ஜன. 26—

பேகம்பேட்டை என்ற நகரில் 'கார்னிவல்' (ஒருவகைத் திருவிழா) திறப்பதற்கு ஒரு எம்.எல்.ஏ. எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரதம் மேற்கொண்ட செய்தி வெளியாகியுள்ளது.

குண்டன்லால் என்ற அந்த எம். எல். ஏ., கார்னிவலில் நிகழும் சில விளையாட்டுக்களை சூதாட்டம் என்று கூறி, அவை நடக்கக் கூடாதென்று கோரியதாகத் தெரிகிறது.

இதற்கிடையில், போபால் கம்யூனிஸ்டுகள் இங்கு நகர மண்டபத்தில் நடைபெறும் நாட்டிய நிகழ்ச்சிகள் கூடாது எனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர் எனத் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 27—1—1955 வியாழன்

நெய்வேலி நிலைமை

நெய்வேலியில் உள்ள பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் பணி புரிந்துவந்த தொழிலாளர்களில் சிலரை 'வேலை இல்லை; இருந்த வேலை முடிந்துவிட்டது; எனவே, ஆட்குறைப்பு செய்கிறோம்' என்று கூறி சுரங்க அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கியதும், அதை எதிர்த்து தொழிலாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு, சுமார் 150 பேர் சிறை பிடிக்கப்பட்டிருப்பதுமான செய்திகள் வெளிவந்துள்ளன.

"தற்போது சுரங்கத்தில் 150 அடி ஆழம் வெட்டப்பட்டு விட்டது; இன்னும் இருபத்தைந்து அடி ஆழத்தில் நிலக்கரி கிடைக்கவிருக்கிறது; தொடர்ந்து வெட்டினுல், நிலக்கரி பரப்புக்கு உயர இருக்கும் நீர் பிரவாகமெடுக்கும். அந்த நீரை அப்புறப்படுத்தத் தேவையான பெரிய இயந்திரங்கள் நம்மிடம் இல்லை. அவை இருந்தால்தான் அவற்றைக் கொண்டு, பெருகும் நீரை இறைத்துவிட்டு நிலக்கரியைத் தோண்டி எடுக்க முடியும்; 1952 முதல்தான் பரீட்சார்த்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது; கடந்த டிசம்பர் 9-ந் தேதியுடன் அந்தத் திட்டம் முடிவடைந்தும் விட்டது; இதற்கிடையில் வேலையைத் தொடர்ந்து மேற்கொள்ள தண்ணீர் இறைக்கும் 'பம்பு'கள் வாங்க சென்னை அரசாங்கத்திடம் பணமில்லை; மேலும், அந்த இயந்திரங்கள் தயாரிக்க ஆறு மாதமாகும்; எனவே, பரீட்சார்த்தத் திட்டம் முடிந்த பின்னும், வேலையேதும் தராமலேயே தொழிலாளர்களை எப்படி சம்பளம் கொடுத்து வேலைக்கு வைத்துக்கொள்ள முடியும்? எனவேதான், படிப்படியாகத் தொழிலாளர்களைக் குறைத்து வருகிறோம்,"

என்று, அந்த நிலக்கரிச் சுரங்க அதிகாரி கூறியதாகவும் செய்தி வெளிவந்துள்ளது.

தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்வதால், அவர்களுக்குப் பதிலாக வேலை செய்ய பவானி போன்ற இடங்களிலிருந்து தொழிலாளர்கள் தருவிக்கப்பட்டிருப்பதாயும், வேறொரு செய்தி வெளிவந்துள்ளது.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்காகத் தருவிக்கப்பட்டுள்ள அமெரிக்க நிபுணர் ஒருவர், 'நிலக்கரி எடுக்கப்பட்டு வெளியில் சேகரித்து வைப்பதினுல் தீங்கொன்றுமில்லை; நிலக்கரிக்கு மேல் பரப்பில் இருக்கும் நீரை இறைக்கத் தேவையான இயந்திரங்களை ஆறே மாதங்களில் தயாரித்துக் கொண்டு வந்து விட முடியும்,' என்று கூறியுள்ளதாகவும் மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

நெய்வேலி சுரங்க வேலையை சிக்கனமாகச் செய்வது பற்றி ஆராய்ந்து கூற, மத்திய அரசாங்கம், குழு ஒன்றை நியமித்திருக்கிறது—இதுவும் இன்னொரு செய்திதான்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்க வேலையை, எப்படியோ, வேண்டாவெறுப்பாகவேதான் ரூ. 60-கோடி செலவில் துவங்குவது என்று மத்திய அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகச் சின்னாட்களுக்கு முன்பு வந்த செய்திகள் கூறின.

இந்தச் செய்திகளை எல்லாம் நுணுகி ஆராய்ந்தால், பல தொழிலாளரை வேலை இழந்து பரிதவிக்கச் செய்யும் அவல நிலையை உருவாக்கியிருக்கிற அதிகாரியின் 'வேலை இல்லை; எனவே, தான் ஆட்குறைப்பு' என்ற கூற்று அர்த்தமற்றது என்பது புலனுகும்.

தாங்களாக விரும்பாவிடினும்; 'நம் நாடே தொழில் வளமாக வேண்டும்; நாமே வாழ வேண்டும்,' என்ற வடநாட்டவரின் வஞ்சகப் போக்கிற்கு இங்கு எழுந்த எதிர்ப்புக்காகவாவது, இந்தியப் பேரரசு, நெய்வேலியில் சுரங்க வேலையைத் துவக்கச் சம்மதித்திருக்கிறது. வேண்டுமானுல், வேலை துரிதமாகத் துவங்குவதில் தனக்கு ஏற்கனவே உள்ள தென்னுட்டைப் பற்றிய அக்கரை இல்லாமையினுல், இந்தியப் பேரரசு சற்று காலதாமதத்தை உண்டுபண்ணினுலும் பண்ணலாமேயன்றி, திட்டத்தையே கைவிடும் துணிவு அதற்கிருக்குமென நாம் நினைக்கவில்லை.

திட்டம் துவங்கப்படும்போது, இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிகமான தொழிலாளர்கள் தேவைப்படுவார்கள் என்பதும் வெள்ளிடைமலை. இந்த நிலையில் 'பரீட்சார்த்தத் திட்டம் முடிந்துவிட்டது; நீர் இறைக்க இயந்திரம் இல்லை; அந்த இயந்திரமும் வாங்க நம்மிடம் பணம் இல்லை; அதனுல் உங்களுக்கும் வேலை இல்லை,' என்று கூறி, ஏற்கனவே பணிபுரிந்து வரும் தொழிலாளர்களை வேலையைவிட்டு விரட்டுவது ஏன் என்பது கண்டுபிடிக்கப்பட்டாக வேண்டும்.

நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஆறு வாரத்தில் கிடைக்கக் கூடுமென அமெரிக்க நிபுணர் கூறியிருப்பதாக வந்துள்ள செய்தி உண்மையானுல், திட்டத்தை நிறைவேற்றுவதில் உண்மையில் அக்கரையும், திட்டம் எந்த நோக்கத்திற்காக நிறைவேற்றப்படுகிறதோ அந்த நோக்கம் ஈடேற வேண்டும் என்பதில் உண்மையான நல்லெண்ணமும் கொண்டவராக சுரங்க அதிகாரி இருந்திருப்பாரேயானுல், திட்டம் மத்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு விட்டதைத் தெரிந்தும் அவர் பல தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கமாட்டார்.

மேலும், வேலையிலிருந்து தொழிலாளர்களை நீக்கியதை எதிர்த்து இதர தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து கிளர்ச்சி செய்கிறார்கள் என்பதைக் கண்ட அந்த அதிகாரி, அதே வேலையைச் செய்ய பக்கத்து ஊர்களிலிருந்து தொழிலாளர்களைத் தருவித்து வேலை நடத்துகிறார்; அதிகாரியின் இப்போக்கு, 'தொழிலாளர்களிடை நிலவவேண்டிய ஒற்றுமை சிறிதளவேனும் வளர்ந்து வருவதை தொழிலாளர்மீது தொழிலாளரையே மோதவிட்டு, ஒற்றுமையைச் சீர்குலைக்கச் செய்கிறது' என்ற குற்றச் சாட்டிலிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ளமுடியாது. இந்தபிளவு பணியை அவர் அறிந்து செய்வதாகவும் இருக்கலாம்; அன்றி அறியாது செய்வதாயும் இருக்கலாம். உண்மை எதுவாயினும் சுரங்க நிபுணரான அவரது போக்கால் தொழிலாளரிடை ஏற்படும் பிளவுக் குற்றச் சாட்டிலிருந்து அவர் தப்ப முடியாதென்பது நிச்சயம்.

ஆறு வாரத்தில் இயந்திரங்கள் பெற முடியும் என்று கூறும்போது, சாதாரண நிர்வாக அதிகாரி ஒருவர் ஆறுமாதமாகும்என்றுகூறுவது, ஏற்றுக் கொள்ளத் தக்கதாயில்லை. அத்துடன், 'வேலையிலிருந்து தொழிலாளர்களை நீக்கியதற்கு, வேலை இல்லாதது அல்ல காரணம்; வேறு காரணமும் உண்டு' என்று தொழிற் சங்கத்தவர் சிலர் கூறுவதும், அவரது கூற்றை உறுதிப்படுத்துகிறது.

சர்க்கார் நடத்தும் தொழிலகங்களில், தொழிலாளர்கள் நடத்தப்படும் முறை, இதர தனிப்பட்ட முதலாளிகளால் நடத்தப்படும் தொழிலகங்களுக்கு எடுத்துக்காட்டாக, முன்மாதிரியாக விளங்கவேண்டியிருக்க, இம்மாதிரி பொருத்தமில்லாக் காரணங்களுக்காக தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவதும், அதை எதிர்த்துக் கேட்டால் சிறையில் தள்ளுவதும், வேலை நிறுத்தம் செய்தால் வேறு ஊரிலிருந்து தொழிலாளர்களைத் தருவித்து வேலை வாங்குவதுமாக ஒரு சர்க்கார் நடந்து கொள்வது, சாதாரண தொழிலாள—பாட்டாளி மக்களின் நலனில் அந்தச் சர்க்காருக்கு கிஞ்சித்தும் அக்கரை இல்லை என்பதையே தெளிவாக்குகிறது.

இயந்திரங்கள் கிடைக்கப் பெறுகிற காலம் வரையில் உள்ள இடைக்காலத்தில், வேலை இல்லை என்றே வைத்துக் கொள்வோம்; அதற்காக அவர்களை வேலையிலிருந்தே வீட்டுக்கு அனுப்புவது எப்படி நியாயமாகும்? அவர்களுக்கு நெய்வேலியிலேயே வேறு வேலையில்லாவிட்டாலும், ஏதாவது வேறு வேலை தருவதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமேயன்றி, வேலையிலிருந்து நீக்குவது கூடாததாகும்.

எனவே, அதிகாரி, தொழிலாளர் கூறுவதுபோன்று, தனது தவறுன போக்கை உடனடியாக மாற்றிக்கொண்டு, வேலையிலிருந்து விரட்டிய தொழிலாளருக்கு மீண்டும் வேலை தந்து, துவக்க நிலையில் உள்ள நெய்வேலி நிலக்கரித் தொழிலை வெற்றிபெறச் செய்யுமாறு கோருகிறோம்.

3,60,688 சதுர மைல் பரப்பளவுள்ள தங்கனியாகாவிற்கு சுயாட்சி வழங்குவதற்கான தேதியைக் குறிப்பிடுமாறு, சென்ற ஆண்டு அங்கு சென்றுவந்த ஐ. நா. குழு குறிப்பிட்டுள்ளது.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்: பரிசீலனைக் குழு நியமனம்

சிக்கனமான முறைகளைக் கண்டுபிடிக்க இந்தியப் பேரரசின் கட்டளை

புதுடில்லி, ஜன. 25—

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி எடுக்கும் திட்டம் சம்பந்தமாக, இந்திய சர்க்கார், சென்னை அரசாங்கத்தைக் கலந்துகொண்டு ஒரு இணைப்புக் குழுவினை நியமித்திருப்பதாகத் தெரிகிறது.

மத்திய சர்க்கார் உணவு இலாகாவின் கூட்டுக் காரியதரிசியான ஜகனுதன் என்பவர் இந்தக் குழுவின் தலைவராகும்.

மிகவும் சிக்கனமான முறையில் பழுப்பு நிலக்கரி எடுப்பது பற்றியும், அதைச் சிறந்த முறையில் பயன்படுத்துவது பற்றியும் திட்டம் தயாரிக்குமாறு இந்திய சர்க்கார், இந்தக் குழுவினரைக் கேட்டுக்கொண்டுள்ளனராம்.

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் உள்ள பிரதேசத்தின் அளவு, நிலக்கரி கிடைக்குமிடம், நிலக்கரியின் தரம் முதலியவற்றைப் பற்றி குழு ஆராய்ந்து முடிவு செய்யும் என்றும், இந்த வேலைகளில் இந்தக் குழுவிற்கு உதவியாக ஏற்கனவே நியமனமாகியுள்ள நிபுணர்களுமிருப்பர் என்றும் தெரிகிறது.

இயற்கையை திருத்தியமைக்க அணுசக்தி பயன்படுமாம்!

ரஷ்ய நிபுணர் தரும் தகவல்

இயற்கையில் உள்ள குறைபாடுகளை அணுசக்தியின் மூலம் திருத்தலாமென ஏ. மார்க்கின் என்ற ரஷ்ய எஞ்சினியர் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

"மலைகளைப் பிளந்து, மத்திய ஆசிய நதிகளைத் திருப்பி, யூரல் கடலுக்கும்—காஸ்பியன் கடலுக்கும் வடக்கே உள்ள பாலைவனங்களைச் செழிப்பான நிலமாக்கலாம்;

சகாரா பாலை வனத்திற்கும் பாசன வசதி செய்து அதனைச் செழிப்பாக்கலாம்;

பாரிங் ஜல சந்தியி அணைகட்டி, உஷ்ணநீரோட்டத்தை வட துருவத்திற்குத் திருப்பி நிரந்தரமாக உறைந்து கிடக்கும் பிரதேசங்களில் உள்ள பனியை உருகச் செய்து அந்த நிலங்களைப் பசுந்தரையாக்கலாம்;

லண்டன், பாரிஸ், பெர்லின், வார்ஸா, மாஸ்கோ, பீகிங் ஆகிய நகரங்களை இணைத்து ரயில்பாதை போடலாம்,"

என்று அவர் தமது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'சிப்பாய்க் கலகம்'

உண்மை வரலாறு எழுதப்படும்

மைசூர், ஜன. 25—

சிப்பாய்க் கலகம் என்றழைக்கப்படும் 1857-ம் ஆண்டின் சுதந்திரப் போராட்டத்தின் சரித்திரத்தை நடுநிலை நோக்குடன், புதியதாக எழுதவேண்டும் என்று மத்திய சர்க்கார் கல்வி மந்திரி அபுல் கலாம் ஆசாத் கருத்தறிவித்துள்ளார்.

இந்திய சரித்திர குறிப்பேட்டுக் குழுவின் 31-வது கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய அவர், அத்தகைய சரித்திரத்தை எழுதும் வேலை பிரபல சரித்திரப் பேராசிரியர் டாக்டர் எஸ். என். சென்னிடம் தரப்பட்டிருப்பதாயும் கூறினுர்.

1857 மே. 10-ந் தேதி அப்போராட்டம் ஆரம்பமானதால் 1957-ம் வருடம் மே. 10-ந் தேதி அப்புத்தகம் வெளியிடுவது பொருத்தமானதாயிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறுர்.

இப்புத்தகம், 1857-ம் ஆண்டில் நடைபெற்ற உண்மையான வரலாறுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்குமென்றும். இந்தியாவில் உள்ள எல்லா சரித்திர ஆதாரங்களையும், லண்டனில் உள்ள இந்தியா ஹவுசில் கிடைக்கும் சரித்திர ஆதாரங்களையும் எஸ். என். சென் பயன்படுத்த அனுமதிக்கப்படுவார் என்றும் ஆசாத் மேலும் கூறினுர்.

மாணவர்களே நடத்திய பள்ளி

சாங்லி, ஜன. 25—

சாங்லி உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் வேலை முதல் சேவகன் வேலை வரையில் மாணவர்களே பூராவும் கவனித்துக் கொண்டனர் என்ற ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

ஒருநாள் முழுவதும் பள்ளிவேலைகள் அனைத்தையும் மாணவர்களே கவனித்துக் கொண்டனராம்.

தாங்களே சேவகன் வேலை செய்திருக்கின்றனர்; தங்களைப் போன்ற மாணவர்களுக்கு பாடம் சொல்லித் தந்திருக்கின்றனர்; தலைமையாசிரியரைப்போல மேற்பார்வை வேலையும் செய்தனராம்.

இந்த ஒப்பற்ற உரிமையை மாணவர்களுக்குத் தருவதற்காக, பள்ளி ஆசிரியர்கள், பணியாளர்கள் எல்லோரும், தலைமையாசிரியர் உட்பட, நேற்று ஒதுங்கி நின்று கொண்டனராம். தங்களுடைய மாணவர்கள் மிக ஒழுக்கத்துடன், ஒருநாள் அத்தனை வேலைகளையும் கவனித்துக்கொண்டது—மிகச் சிறந்ததாயிருந்தது ஆசிரியர்களை மிகவும் கவர்ந்ததாம்.

நெல் சாகுபடியில் புதிய முறை

ப்ளாஸ்டிக் முறை கண்டுபிடிப்பு

ஐதராபாத், ஜன. 25—

எம். எஸ். பாவார் என்பவர் 'பிளாஸ்டிக்' முறையில் நெல் சாகுபடியைக் கண்டுபிடித்திருப்பது உற்பத்தியாளர் பலரின் கவனத்திற்கு வந்துள்ளது.

இந்த முறைப்படி சாகுபடி செய்தால் நீர்ப்பாசனத்திற்காக ஆகும் செலவு 75 சதவிகிதம் குறையுமென்று விவசாய இலாகா டைரக்டர் குறிப்பிட்டிருக்கிறுராம்.

நீர்ப்பாசனத்திற்கு கிணறுகளை நம்பிக் கிடப்பவர்கள் இம்முறையினுல் இலகுவில் சாகுபடி செய்யலாம் என்று சொல்லப்படுகிறது.

இந்த புதிய முறைப்படி, விதைகள் சீக்கிரமே முளைத்து நாற்று விடுகின்றனவாம்.

சாதாரண முறையில் விதைகள் முளைத்து நாற்று விடுவதற்கு மூன்று மாதங்கள் ஆகும் என்றும் ஆனுல் இந்த 'பிளாஸ்டிக்' முறையால் 10 தினங்களிலேயே இது சாத்தியமாகிறது என்றும் சாதாரண சாகுபடி முறைக்கு வேண்டியதைவிட ஐந்தில் ஒரு பங்கு தண்ணீரே போதுமானதுஎன்றும் விவசாய இலாகா டைரெக்டர் தெரிவித்திருக்கிறுர்,

இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்

சென்னை சர்க்கார் அனுப்பிய பிரரேபணைகள்

சென்னை, ஜன. 25—

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு இந்திய சர்க்காரைக் கோரி, சென்னை சர்க்கார் பல திட்டங்களை அனுப்பியிருக்கின்றனர் என்று தெரிகிறது. அவைகளில் முக்கிய விவசாயத் திட்டங்கள் பின்வருமாறு :—

காத்தலை கால்வாய்த் திட்டம்—ஒன்றரை கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் இத்திட்டம் திருச்சி மாவட்டத்தில் 20,000 - எக்கர் நிலங்களைச் சாகுபடி செய்யுமென்று மதிப்பிடப்படுகிறது.

புள்ளம்பாடி கால்வாய் திட்டம்—ஒன்றரை கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். திருச்சி மாவட்டத்தில் இத்திட்டம், 22,000 எக்கர் நிலங்களுக்குப் பயன்தரும் என்று தெரிகிறது.

கன்கிரப்பு அணைத் திட்டம்—மலபாரில் இத்திட்டம் அமுலாகும். 2,500 எக்கர் நிலத்திற்கும், மூன்றுவது போகம் பயிரிடப்படும் 6,000- எக்கர் நிலத்திற்கும் இது பயன் தருமம். இத்திட்டத்தின் செலவு சுமார் ரூ. 3½ கோடி.

பாலக் கழிபுழா அணைத் திட்டம்—மலபாரில் 7,500 எக்கர் நிலத்திற்குப் பயன்தரும். இதன் செலவு ரூ. 1½ கோடி என்று மதிப்பிடப்படுகிறது.

மலபாரில் மீனக்கரைத் திட்டம்—ரூ. 50 லட்சம் செலவிடப்படும் ; 4,000 எக்கர் நிலம் பயன் அடையும்.

தென்னாற்காடு மாவட்டத்தில் மணிமுத்தாறுநதி, கோமுகி திட்டமும், சேலம் மாவட்டத்தில் தொப்பையாறு திட்டமும் அமுலாகும் ; இவைகளினின் செலவு ஒவ்வொன்றுக்கும் ரூ. 75 லட்சமாகும். இவைகள் முறையே 4,000, 8,000, 2,500 எக்கர் நிலங்களுக்கு பாசனம் அளிக்கும்.

இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் சென்னை மாநிலத்தின் உணவு உற்பத்தி, 36,000 டன் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மின்சாரத் திட்டங்கள் பல இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படும்.

குண்டா—திட்டம் ஆரம்பத்தில் இதன் செலவு ரூ. 26 கோடி. இங்கே 1,45,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். 10 ஆண்டுகளில் இத்திட்டத்தின் செலவு 30 கோடியாக உயருமென்று தெரிகிறது.

கும்பார்-அமராவதி திட்டம்.—இதன் செலவு சுமார் 8 கோடி. இங்கே, 45,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகும்.

மேட்டூர் கீழ்மட்ட ஹைட்ரோ மின்சாரத் திட்டம்-இதன் செலவு ரூ. 6 12 கோடி ; இதன் உற்பத்தி 75,000 கிலோவாட் மின்சாரம்.

பாபநாசம், பைக்காரா திட்டங்களின் அபிவிருத்தித் திட்டம்—இவற்றின் செலவு முறையே ரூ: 40 லட்சம் ; 30 லட்சம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 1,000 கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படும்.

ஆண்டு ஒன்றுக்கு 10,000 'பம்பு' செட்டுகள் அமைக்கப்படும்.

அரிகிருஷ்ண மகதாப்

பம்பாய் கவர்னராவார்

கட்டாக், ஜன. 25—

மத்திய காங்கிரஸ் பார்லிமெண்டு போர்டின் பொதுச் செயலாளர் அரிகிருஷ்ண மகதாப் பம்பாய் கவர்னராக நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது. கவர்னர் பதவியேற்க அவர் ஒப்புக்கொண்டுள்ளாராம்.

பண்டித நேரு லண்டன் செல்லும் முன்பு இதுபற்றிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமென்று தெரிகிறது.

திரு—கொச்சி விவசாயிகள்

100 பேர் போபாலில் குடியேற்றப்படுவர்

திருவனந்தபுரம், ஜன. 24—

திரு-கொச்சி மாநிலத்திலுள்ள 100 விவசாயக் குடும்பங்களை போபாலுக்கு குடியேற்ற ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. முதல் முறை 100 விவசாயக் குடும்பங்கள் திரு-கொச்சியிலிருந்து போபாலுக்கு அனுப்பப்பட்டன. இப்போது மீண்டும் 100 குடும்பங்கள் அனுப்பப்பட இருக்கின்றன. இக்குடும்பங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்திய சர்க்கார் உணவு இலாகா துணைச் செயலாளர் டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஒரு குழுவினர் ஜனவரி 20-ந் தேதி முதல் 22-ந் தேதி வரையில், திரு-கொச்சியில் 13 தாலுகாக்களில் சுற்றுப்பயணம் செய்தனர்.

இந்த 100 பேரும் இன்னும் இரண்டு மாதங்களில் கொச்சி துறைமுக ரயில் நிலையத்திலிருந்து தனி வண்டியில் போபாலுக்கு அனுப்பப்படுவார்கள். சில நாட்களுக்குப் பின்னர் அவர்களது குடும்பங்களும் போபால் செல்வார்களாம்.

20,00,000 புது வீடுகள்

யுத்தம் முடிந்த பிறகு பிரிட்டனில் 20,00,000 புது வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதனால் சுமார் 60,00,000 மக்களுக்கு குடியிருப்பு வசதி கிடைத்திருக்கிறது; ஆனாலும் குடியிருப்பு வசதி நெருக்கடி தீர்ந்துவிட்டதாகச் சொல்வதற்கில்லை. இடிபாடுகளை அகற்றி புது வீடுகளைக் கட்ட நகர சபைகளின் திட்டம் கோரப்பட்டிருக்கிறது.

கைத்தறித் துணி விற்பனை

★

சென்னை :

13—1—55 காலையிலிருந்து சென்னை—சைதை தி. மு. கழகத் தோழர்களால் சுமார் ரூ. 300-க்கு கைத்தறித் துணி விற்பனை செய்யப்பட்டது.

* * *

9, 10—1—55 ஆகிய இருநாட்களில் சென்னை-கோடம்பாக்கம் தி. மு. கழகச் சார்பில், காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை கைத்தறித் துணிகளை 35-வது வட்டத்தில் கழகத் தோழர்கள் 505 ரூபாய்க்கு விற்பனை செய்தனர்.

சூளேசுவரன்பட்டி :

11—1—55ல், தி. மு. கழகத் தோழர்கள் ரூ. 250-க்கு கைத்தறித் துணி விற்பனை செய்தனர்

அருப்புக்கோட்டை :

11—1—55ல், தி. மு. கழகச் சார்பில் தோழர் எம். எஸ். இராமசாமி தொடங்கிவைக்க, கைத்தறி துணியை தோழர்கள் பலர் ரூ. 250-க்கு விற்பனை செய்தனர்.

நகரின் சாலைச் சந்திப்பு இடங்களில் தோழர் எம். எஸ். இராமசாமி, பொதுமக்கள் கைத்தறித் துணி அணியவேண்டியதின் அவசியத்தைஎடுத்துக்கூறியும்,வடநாட்டு ஆலைத் தொழில் தென்னகத்தில் நுழைந்தால் தென்னாட்டு நெசவுத் தொழிலாளரின் நிலை பாதிக்கப்படும் என்பதையும் எடுத்துக்கூறி, தோழர்களெல்லோரும் கைத்தறி ஆடைகளையே ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

பம்மல் பொதுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, பொன்னம்பலனார், மதியழகன் சொற்பொழிவு

சென்னை பல்லாவரத்தை அடுத்துள்ள பம்மல் தமிழர் மன்றச் சார்பில் 23—1—55 மாலை 7 மணிக்கு தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் பொங்கல் விழா பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. கூட்டத்திற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தனர். தலைவர் தமது உரையில், திராவிட மக்கள் பொங்கல் விழாவைக் கொண்டாடுவதின் நோக்கத்தைச் சுட்டிக் காட்டினார். பொங்கல் விழா, உழைப்பின் பலனை உழைப்பாளர்கள் கண்டும், உண்டும் களித்திடும் ஓர் சிறந்த விழாவாகும் என்றும், இந்த விழாவைக் கொண்டாடுகிற நாம் மக்கள் சமுதாயத்தில் ஜாதி, மத வேற்றுமைகள் நீங்கிய அன்பு வளர்ச்சி ஏற்பட பகுத்தறிவு நெறியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பின்னர் தோழர் கே. ஏ. மதியழகன், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்களும் பொங்கல் விழாவை நாம் கொண்டாடுவதின் நோக்கம் குறித்தும், பண்டைக்காலம்—பழைய கொள்கை—இவற்றுள் நாம் கொண்டுள்ள மூட நம்பிக்கை பற்றியும், கடவுள்—மதம்—புராணம் இவற்றால் மக்கள் பல்லாண்டுகளாகத் தெளிவில்லாமல் பணத்தையும் நேரத்தையும் பாழாக்கி வருவதுடன், மக்களிடையே பழைமையும் அறியாமையும் வளர்ந்து வருவதையும் எடுத்துக் கூறிவிட்டு, வாழ்க்கை பொய்யென்றுப், மோட்சமாகிய நற்கதி பெறுவதே வாழ்க்கையின் நோக்கம் என்றெல்லாம் மக்களிடையே நிலவி வரும் கருத்துக்களால் அவர்கள் இடர்படுகின்ற நிலையை விளக்கியும், திராவிட மக்கள் அறிவு வளர்ச்சி, அன்பு நெறியினைப் பின்பற்றி, தங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காணவேண்டுமென கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினர்.

நாடகத் துறை பேராசிரியர் ப. சம்பந்தனார் அவர்கள் அனுப்பிய பொங்கல் வாழ்த்தும் கூட்டத்தில் படித்துக் காண்பிக்கப்பட்டது.

சென்னை :

14—1—55 காலை 10 மணிக்கு சென்னை 18-வது வட்டம் புளியந்தோப்பு தி. மு. கழகப் பணிமனையில் தோழர் சா. கோ. நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் எம். வி. முத்து, எல்லப்பன், கே. எஸ்.மணி, மற்றும் பலர் பொங்கல் விழாவின் சிறப்புக் குறித்துப் பேசியபின் தின்பண்டங்கள் வழங்கப்பட்டது.

* * *

14—1—55 காலை 8 மணிக்கு சென்னை 50-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், கழகப் பணிமனையில் தோழர் தெ. பாண்டியன் தலைமையில் நடைபெற்ற விழாவில், தோழர் நி. சமூகன் கழகக் கொடியேற்றுவித்த பின்னர், 'திராவிடர் திருநாளின் சிறப்பு' குறித்துத் தோழர்கள் பொ. இரத்தினவேலு, ம. சோ. நெடுமாறன், சு. தங்கசாமி ஆகியோர் பேசினர். பின்னர், தோழர்களுக்கு தேனீர் விருந்தும், சிறுவர்களுக்கு இனிப்பும் வழங்கப்பட்டது. பகல் 12 மணியளவுக்கு கழகப் பணிமனையிலிருந்து தோழர் சி. சிந்தனைச்செல்வன் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு எழும்பூர் சென்று, அங்கு 'சரியா தப்பா' என்ற நாடகமும் மேற்படி தோழர்களால் நடத்தப்பட்டது.

* * *

23—1—55 காலை 9 மணிக்கு 35-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், கழக இல்லில், தோழர் மதிவாணன் தலைமையில் பொங்கல் விழாக் கூட்டம் நடைபெற்றது. விழாவில் திரு. வி. க. பள்ளி, வ. உ. சி. மன்றம், கலைவளர் கழகம் ஆகியவை கலந்துகொண்டன. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற திரு. வி. க. பள்ளி மாணவ மாணவிகளுக்கு தோழர் வடிவேலன் பரிசுகள் வழங்கினார். பின்னர், தோழர்கள் சா. வில்லவன், சோ.கிருட்டிணமூர்த்தி, அருட்சிவவர்மன், இளவழகன் ஆகியோர் பேசியபின், தோழர் இளங்கோ அனைவருக்கும் வெண் பொங்கல் வழங்கினார்.

* * *

23—1—55ல், சென்னை—பெரம்பூர் பாரக்ஸ் திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றச் சார்பில், மன்றக் கட்டிடத்தில் தோழர் எம். வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். பின்னர், சுமார் 200 தோழர்களுக்கு இனிப்புடன் தேனீர் வழங்கப்பட்டது. அன்று மாலை தோழர் எம். மாணிக்கம் தலைமையில் நடைபெற்றபொதுக்கூட்டத்தில்தோழர்கள் என். வி. நடராசன், ஜி. செல்வபதி, சி. கே. நாராயணன், ஆர். டி. அரசு ஆகியோர் பொங்கல் விழா அவசியம் பற்றிப் பேசினார். இறுதியில் மன்றத்தாரால் 'நெசவாளியின் கண்ணீர்' என்ற நாடகம் நடத்தப்பட்டது.

தூத்துக்குடி-புதுக்கோட்டை

தூத்துக்குடியை அடுத்துள்ள புதுக்கோட்டையில் 16—1—55 மாலை 6½ மணிக்கு தி.மு.க.சார்பில் தோழர் எ. இராயப்பன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் எம். இரத்தினம், வே. அருணாசலம், இரா. சு. தங்கப்பழம் ஆகியோர் பொங்கல் விழாவின் சிறப்பு பற்றிப் பேசினர்.

சேவூர்: (வ.ஆ. மாவட்டம்)

14—1—55 காலை 9 மணிக்கு, கழகப் பணி மனையில், தோழர் வி. இ. செயராமன் கழகக் கொடியேற்றுவித்த பின்னர், கழகக் கட்டிடத்தில், தோழர் கே. எம். சாரங்கபாணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திராவிடர் திருநாள் கொண்டாடுவது பற்றி தோழர்கள் எஸ். ஏ. கைலாசன், ஏ. கே. குமாரவேல் ஆகியோர் பேசினர். தோழர்களனைவருக்கும் பொங்கலும் பழமும் வழங்கப்பட்டது.

இராசபாளையம் :

14—1—55 மாலை 7 மணியளவில் தோழர் செயராம் ராசா தலைமையில் திருவள்ளுவர் நூல் நிலையச் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாக் கூட்டத்தில், தோழர்கள் க. திருமாறன், ஆர். எம். இராமசாமி, கூர்மாவதாரக்கோன், சி. ஜே. இராசேந்திரன், எஸ். குருசாமி, பொன்னுச்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சூளேசுவரன்பட்டி :

இவ்வூர் தி. மு. கழகச் சார்பில், ஊரின் பல பகுதிகளில் கழகக் கொடியேற்று விழா நடைபெற்று விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கடம்பூர் :

14—1—55 காலை 9½ மணிக்கு, கழகத் தோழர்கள் அனைவரும், தோழர் அ. அருணாசலம் தலைமையில் அணிவகுத்து ஊர்வலம் சென்றனர். தோழர் இரா. முத்துமாலை, கட்டபொம்மு திடல், தானமுத்து இல்லம், கழகப் பணிமனை முதலிய இடங்களில் கழகக் கொடியேற்றினார். தோழர் வே. மு. மாரியப்பா அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். இரவு 8½ மணிக்கு, தோழர் பு. பொன்னுசாமி குழுவினரின் இன்னிசை விருந்து நடைபெற்றது.

புதுவை :

23—1—55 மாலை 7 மணியளவில், புதுவை ஒதியஞ்சாலைத் திடலில் பொங்கல் விழா சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கு. முருகையன் தலைமையுரைக்குப் பின், பரிசளிப்பு நிகழ்ச்சிகள் நடந்தேறின. பொங்கல் விழாக் கட்டுரை—பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ—மாணவியர்க்குத் தோழியர் அருண்மொழி அவர்கள் முதற் பரிசான வெள்ளிக் கோப்பைகளும், இரண்டாம் பரிசான 'பைலட் ஊற்றுப் பேனா'வும், மூன்றும் பரிசான தமிழ் நூல்களும் வழங்கிய பின்னர் பேசியதாவது :—

"பொங்கல் விழா, ஆரிய அடிப்படை அமைந்த ஏனைய விழாக்களினின்றும் மாறுபட்டது—தனித் தன்மையது. இன்ப விழா நாளாகத் தொடங்கி திராவிடர் திருநாளாக மலர்ந்துள்ளது," என்று குறிப்பிட்டுவிட்டு, மூடப் பழக்கவழக்கங்களை முறியடிக்கத் திராவிடர் முன்னணி முன் வந்திருப்பதைப் பொதுமக்கள் முழு மனதோடு ஏற்றுச் செயல்பட வேண்டும் என்றும் கூறினார்.

பின்னர், தோழர் கண்ணதாசன் விரிவுரையாற்றுகையில், "திராவிட இயக்கங்கள் பொருளாதார—சமூகத் துறைகளில் ஆற்றிவரும் பணிகளைக் குறிப்பிட்டுவிட்டு, ஆவடிக் காங்கிரசும்-நேருவின் புதுவை வருகையும் வடநாட்டுச் சுரண்டலுக்குக் கணக்குப் போடுவதற்கேயன்றி, தமிழ் மக்கட்கோ—புதுச்சேரிப் பகுதியினருக்கோ புது வாழ்வு அளிப்பதற்கு அல்ல," என்றார். மேலும் அவர், "திராவிட நாட்டுப் பிரிவினைதான் பொருளாதார விடுதலை, சமுதாய விடுதலை முதலிய எல்லா பிரச்சினையும் தீர ஒரே வழியாகும்" என்றார்.

பேச்சாளருக்கு திராவிடர் முன்னணியும், அதன் வட்டாரக் கிளைகள் சார்பில் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன. திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம், புதுப்பேட்டை வாசிகள் சார்பாக மாலைகளும் அணிவிக்கப்பட்டன

மணக்கால் :

15—1—55ல், இவ்வூர் தி. மு. கழகத்தின் 5-ம் ஆண்டு விழாவும், திராவிடர் திருநாளும் தோழர் அன்பில் தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் டி. கே. சீனிவாசன், மதிவாணன், ம. சி. சோமசுந்தரம் ஆகியோர் 'பொங்கல் விழாவும், நமது கழகமும்' என்பது குறித்துப் பேசினர். பின்னர் கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சின்னாளப்பட்டி :

20—1—55 பிற்பகலில் தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் எம். வீரண்ணன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தோழர்கள் பாலு, எஸ். சேதுபதி ஆகியவர்கள் பேசினார்கள். அனைவருக்கும் பொங்கல், கரும்பு வழங்கப்பட்டது. அன்று மாலை 6 மணிக்கு வள்ளுவர் திடலில் தோழர் கு. ஜெயராம் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் எஸ். சேதுபதி, எம். எஸ். ராமசாமி ஆகியோர் 'பொங்கல் விழாவும், தற்கால அரசியலும்' என்பது பற்றிப் பேசினர்.

திருப்பயர் :

21—1—55ல், இவ்வூரில் பொங்கல் விழாவை முன்னிட்டு கழகச் சார்பில், தோழர் என். முருகேசன் தலைமையில், தூத்துக்குடி தோழர் ஜி. அப்பாசாமி அவர்கள் சுமார் ஒரு டன் விறகை தீக்கொளுத்தி, எரிந்துகொண்டிருந்த தீக்குழியில் சுமார் 3 மணி நேரம் நின்று, 'மந்திரமா—தந்திரமா'? என்ற நிகழ்ச்சிகளைச் செய்து காட்டி, 'இவையெல்லாம் மந்திரமல்ல — பச்சிலை மூலிகையின் உதவிதான்' என்று விளக்கினார்.

‘ஆச்சாரியார் திட்டமும் ஆதாரத் திட்டமும் எங்களுக்கு வேண்டாம்’

‘சர்க்கார் குமாஸ்தாக்களைப் போன்றே ஆசிரியர்களுக்கும் ஊதியம் வேண்டும்’

கல்விச் சீர்திருத்தக் குழுவுக்கு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பதில்

பெண்ணாகடத்தில், 18-1-55 அன்று நிகழ்ந்த நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் கழகத்தினரின் கூட்டத்தில், டாக்டர் அழகப்ப செட்டியார் ஆரம்பக் கல்விக் குழு கொடுத்துள்ள வினாத் தாள் பற்றி விவாதித்து கீழ்க் கண்ட முடிவுகள் தெரிவிக்கப்பட்டிருக்கிறது :—

மாநில சர்க்காரே எல்லா ஆரம்பப் பள்ளிகளையும் ஏற்று நடத்த வேண்டும்.

ஒவ்வொரு வட்டக் கல்வி அதிகாரிக்கும் 40 பள்ளிகளுக்கு மேல் ஒதுக்கப்படுதல் கூடாது; ஒவ்வொரு பள்ளியும், மாதத்தில் ஒரு முறை வட்டக் கல்வி அதிகாரியாலும், ஆண்டிற்கு ஒருமுறை மாவட்டக் கல்வி அதிகாரியாலும் பார்வையிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆரம்பக் கல்விக்கென தனி மாவட்டக் கல்வியதிகாரி இருக்க வேண்டும்.

முதல் மூன்று வகுப்புகளில் படிப்பு, எழுத்து, கணக்கு மட்டும் கற்பிக்கப்படுதல் வேண்டும்.

4, 5 வகுப்புகளில் மேற்கண்ட மூன்று பிரிவுடன் மாநில சரித்திர, பூகோள, ஆட்சிமுறை பற்றிய பொது அறிவுப் படிப்பும் கற்பிக்கப்படுதல் வேண்டும்.

ஆரம்பப் பள்ளிகள், உணவு விடுதிகளுடன் கூடிய ‘தங்கியிருந்து படிக்கும்’ (போர்டிங்) பள்ளிகளாக இருக்க வேண்டும். (உணவு விடுதிகள் தேர்ச்சி பெற்ற ஆசிரியைகளால் நடத்தப்படுதல் வேண்டும்.)

இக்கழகம் ‘ஆச்சாரியார் கல்வித் திட்டத்’தையோ அன்றி ‘ஆதாரக் கல்வி முறை’யையோ விரும்பவில்லை.

சரியான இடவசதி இல்லாத இடங்களில் இரண்டு குழுவாக ஆசிரியர்களைக் கொண்ட ‘ஷிப்ட்’ முறையைக் கொண்டுவரலாம்.

எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு சர்க்கார் இலாகாக்களில் வேலை செய்யும் ‘லோயர்’ டிவிஷன் கிளார்க்’குகள் பெறும் ஊதியமும், செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு ‘அப்பர் டிவிஷன் கிளார்க்’குகள் பெறும் ஊதியமும் தரப்படுதல் வேண்டும்.

ஆசிரியர்களுக்கு பிராவிடண்ட் பண்டு, பென்ஷன், இன்ஷ்யூரன்ஸ் ஆகிய வசதிகள் அளிக்கப்படுதல் வேண்டும்.

ஆசிரியைகளை நிறைய வேலையில் அமர்த்த வேண்டும்; சிறப்பாக முதல் மூன்று வகுப்புக்கள் ஆசிரியைகளிடமே ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

விளையாட்டுகளுக்கும், உடற்பயிற்சிகளுக்கும் நிறைய வசதிகள் அளிக்கப்பட வேண்டும்; அவைகள் தகுந்த மேற்பார்வையிலேயே நடைபெற வேண்டும்.

ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு

ஜப்பான் கலந்துகொள்ளும்

நடைபெறவிருக்கிற ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டில் ஜப்பான் கலந்துகொள்ளக் கூடும் என்று பிரதமர் ஷிகெமிட்சு குறிப்பிட்டிருக்கிறார்.

ஜப்பானுக்கு அதிகாரபூர்வமான அழைப்பு கிடைத்திருப்பதாயும், உடன் அந்த அழைப்புக்கு பதில் உனுப்பிவிட உத்தேசித்திருப்பதாயும் வெளிநாட்டிலாகா மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

எப்படியும் இதுபற்றிய இறுதி முடிவை அண்மையில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்குப் பின் அமையும் புதிய மந்திரி சபையே மேற்கொள்ளும் எனத் தெரிகிறது.

பரீட்சைகளை ஒழித்து விடுக!

குஜராத்தி கவிஞர் யோசனை

அகமதாபாத், ஜன. 26—

மக்கள் சபைச் சட்டம் ஒன்றின் மூலமாயினும், நடைபெறும் பள்ளிப் பரீட்சை முறைகளை ஒழிக்க வேண்டுமென்று, ‘சாகித்திய அகாடமி’ நிர்வாகக் குழு உறுப்பினரான உமாஷங்கர் ஜோஷி என்பவர் கூறியிருக்கிறார்.

மிகப் பிரபலமான குஜராத்திக் கவிஞரான ஜோஷி, கல்வி நிபுணர்கள் நடத்திய ‘ஒரு பொருள் பலருரை’ விழாவில் பேசுகையிலேயே மேற்கண்ட யோசனையைக் கூறியிருக்கிறார்.

“கல்வி அதிகாரிகள், மாணவர்களின் அறிவுத் திறனை சோதிப்பதற்கு மாறாக, மாணவர்களுக்குத் தெரியாதது என்ன என்பதைச் சோதிப்பதிலேயே ஆவல் உடையவர்களாயிருக்கிறார்கள்,” என்று, குறிப்பிட்டார்.

தேர்தலில் வெற்றி பெறும் வழி!

தம்பிடிகூடச் செலவு செய்யவில்லையாம்

ஐதராபாத் மந்திரி தகவல்

மைசூர், ஜன. 26—

கடந்த பொதுத் தேர்தலில் தான் ஒருவர்தான் இந்தியாவிலேயே ஒரு தம்பிடிகூட தேர்தலுக்காகச் செலவிடாது வெற்றி பெற்றவர் என்று ஐதராபாத் பொது மராமத்து இலாகா மந்திரி டாக்டர் கே. எஸ். மெல்கோட் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநில தொழிலாளர் கட்சியின் தலைவராக தான் இருந்தமையால், நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வாக்குப் பதிவு தினத்தன்று வேலை முடிந்ததும், சாப்பாட்டுப் பாத்திரங்களுடன் ஓட்டுச் சாவடிக்கு தாமாகவே வந்து தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர் மேலும், பிறரையும் தனக்கே வாக்கு செய்யுமாறு அத்தொழிலாளர்களே தூண்டினர் என்றும் அவர் ஒரு கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொழிலாளர்களே தமக்காக சிரத்தை எடுத்துக் கொண்டமையால், தனது எதிரிக்கு தன்னைக் காட்டிலும் ஆயிரத்திற்குமதிகமான வாக்குகள் குறைவாக விழுந்தன என்று குறிப்பிட்டார்.

மீனவர் கழகம் திறப்புவிழா

23—1—55 மாலை 5 மணிக்கு சென்னை இராயபுரத்தில் தோழர் கே. குப்புராஜ் தலைமையில் தோழர் எஸ். சுயம்பிரகாசம் எம். எல் ஏ, (சட்டசபை திராவிட கட்சி) திறந்து வைத்தார். தோழர் என். ஜீவரத்தினம் மீன் கொடி ஏற்றினார். பின்னர், தோழர்கள் எஸ் தெய்வசிகாமணி எம். எல். ஏ., சேலம் எ. சுப்பிரமணியம் எம். எல். சி., வி. எம். கடிகாசலம், மற்றும் பலரும் மீனவர் குறைகள் பற்றி பேசினர்.

பொங்கல்விழாப் பொதுக் கூட்டங்கள்

ஜன. 28, 29, 30-ந் தேதிகளில் திருவத்திபுரம் தி. மு. கழகச் சார்பில், திருவத்திபுரம் தோ. மு. ஆ. ரைஸ் மில் திடலில் பொங்கல் விழாப் பொதுக் கூட்டங்கள் நடைபெறும்.

28—1—55 மாலை **6** மணிக்கு, தோழர் சி. வி. சுப்பராயன் தலைமையில் தோழர் க. அன்பழகன் பேசுவார்.

29—1—55 மாலை **6** மணிக்கு, தோழர் டி. எம். ரங்கசாமி தலைமையில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசுவர்.

30—1—55 மாலை **6** மணிக்கு, தோழர் பி. கே. இராமசாமி தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

* * *

30—1—55 மாலை 4 மணிக்கு; ஆமதாபாத்-ஜமால்பூர் பிரேமாபாய் மண்டபத்தில், ஆமதாபாத் தி மு. கழகச் சார்பில் நடைபெறும். தோழர் இரா. நடராசன் பேசுவார். முத்தமிழ் நாடக மன்றத்தாரின் ‘ஏழையின் கண்ணீர்’—நாடகமும் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

குளக்காட்டுப்புதூர்
அழகிரி திடலில்
29—1—55 மாலை **6** மணிக்கு
தலைவர் : இரா. சண்முகம்
பேசுவோர்:
என். வி. நடராசன்
வி. கே. ராசு
டி. பி. மூர்த்தி

★

மரமடக்கி
அண்ணா திடலில்
29—1—55 மாலை **6½** மணிக்கு
தலைவர் : பி. எம். கணேசன்
பேசுவோர் :
டி. கே. சீனிவாசன்
கே. அடைக்கலம்

திருச்சி பெரியகடை வீதி தி.மு.கழக உறுப்பினர்கட்கு

29—1—55 இரவு 9 மணிக்கு, திருச்சி, பெரியகடை தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், கழகக் கட்டிடத்தில், கழகச் செயலாளர் தலைமையிலும், மாவட்டச் செயலாளர் முன்னிலையிலும் நடைபெறும்.

பம்மல் பொதுக்கூட்டம்—ஒரு திருத்தம்

இன்றைய ‘நம் நாடு’ இதழ் 3-ம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பம்மலில் நடைபெற்ற திராவிடர் திருநாள் பொதுக்கூட்ட நிகழ்ச்சியில், கூட்டத்தில் பேசியவர்களில் ஒருவரான தோழர் எம் கே. நவநீதம் அவர்களது பெயர் விடப்பட்டிருக்கிறது. அன்பு கூர்ந்து அவருடைய பெயரையும் சேர்த்து வாசிக்கக் கோருகிறோம்.

—(ஆ - ர்.)

சிறையிலிருந்து கைதிகள் தப்பியோடினர்

பிரெஞ்சு மொராக்கோவைச் சேர்ந்த மோகதார் பகுதியிலுள்ள சிறையொன்றிலிருந்த கைதிகளில் 21 பேர் சிறைக் காவலாளிகளை மீறி, அவர்களிடமிருந்த துப்பாக்கிகளைப் பறிமுதல் செய்துகொண்டு தப்பி ஓடிவிட்டனர் எனத் தெரிகிறது. இப்போது சிறையைச் சுற்றிலும் காவல் போடப்பட்டுள்ளதாம்.

கட்சிப் பணியைச் சரிவரச் செய்யாதகம்யூனிஸ்டுகள்

கட்சியிலிருந்து விலக்கப்பட்டனர்

பம்பாய் கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து இருவர்—உற்சாகத்துடனும் விசுவாசத்துடனும் கட்சியில் பணிபுரியவில்லை என்பதற்காக விலக்கப்பட்டுவிட்டனர் என்ற தகவல் வெளிவந்துள்ளது.

கட்சி, ஐந்து பேர்களுக்கு, அவர்கள் சரியாக வேலை செய்யாததைச் சுட்டிக்காட்டி, ‘ஏன் அவர்களை எல்லாம் கட்சியிலிருந்து நீக்கக்கூடாது?’ என்று காரணங் காட்டுமாறு கோரி நோட்டீஸ் அனுப்பியிருந்ததாம்!

அவர்கள் மீதெழுந்த குற்றச்சாட்டெல்லாம்—கட்சிக்கு அவர்கள் பணம் திரட்டுவதில்லை; கட்சிக் கூட்டங்களுக்குத் தொடர்ந்து வராதிருத்தல்; கட்சி முடிவுகளுக்குக் கட்டுப்படாதிருத்தல்—போன்றவையாகும்.

ஐந்து பேர்களில் மூன்று பேர், இனி தாங்கள் தொடர்ந்து நன்கு வேலை செய்வதாக உறுதி கூறினராம். இதர இருவர், தங்களுக்குக் கட்சிப் பணியில் முழு கவனமும் செலுத்த இயலவில்லை என்று கூறியதின் பேரில் கட்சியிலிருந்து விலக்கப்பட்டனராம்.

விலக்கப்பட்டவர்கள், நார்கோல்கர், என். எஸ். கிராட்கர் என்ற இருவருமாவர்.

தொழிலாளரிடையே துப்பாக்கிச் சண்டை

போட்டி தொழிற் சங்கங்களின் விபரீதப் போக்கு

பொன்குன்னம், ஜன. 22—

திரு—கொச்சி பகுதியிலுள்ள செறுவள்ளி தோட்டமொன்றில் வேலை செய்துவரும் தோட்டத் தொழிலாளரிடையே ஏற்பட்ட ஒரு கலவரத்தின் காரணமாக, தொழிலாளர்களே மற்றொரு சாராரான தொழிலாளர் மீது துப்பாக்கியால் சுட்டதாகவும், அதன் விளைவாக இரண்டுபேர் காயமுற்று மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இத்தோட்டத்தில் வேலை செய்து வருகின்ற தொழிலாளர்கள் சிலர் கடந்த 16 நாட்களாகவே தொடர்ந்து வேலை நிறுத்தம் மேற்கொண்டிருக்கின்றனர். அங்கே கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒரு தொழிலாளர் இயக்கமும், இந்திய தேசியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் சார்பில் ஒரு இயக்கமும் இருந்து வருகிறது. குறிப்பிட்ட அந்த வேலை நிறுத்தத்தை கம்யூனிஸ்டு கட்சி சார்பு தொழிலாளர்கள் மேற்கொண்டதும், மற்ற சாரார் வேலைக்குச் சென்றதுமே இந்தக் கலவரத்துக்குக் காரணமாக இருந்ததாம். இந்தக் கலவரத்தில், தொழிலாளர்களே மற்ற தொழிலாளர் மீது துப்பாக்கியால் சுட்டதாகவும், துப்பாக்கிக் குண்டுக்கு இலக்காகி, கம்யூனிஸ்டு கட்சி சார்பு தொழிலாளர்கள் இருவர் காயமுற்றதாகவும் அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது.

கம்யூனிஸ்டு சார்பு தொழிலாளர்கள், இ. தே. தொ சங்கக் காங்கிரசைச் சேர்ந்த ஜீப் கார் ஒன்றைத் தடுத்து நிறுத்தி அதைப் பலமாகச் சேதப்படுத்தியதுடன், அதையோட்டி வந்த டிரைவரையும் தாக்கினர் என்று கூறப்படுகிறது.

ரூ. 20 ஆயிரம் பறிபோயிற்று!

சென்னை, ஜன. 25—

பம்பாய் மெயிலில் பிரயாணம் செய்யவிருந்த ஒரு பிரயாணி, தன் பையில் வைத்திருந்த 20,000 ரூபாய், பை கத்தரிக்கப்பட்டு விட்டதாக சென்னை, சென்ட்ரல் ரயில் நிலைய போலீசாரிடம் புகார் செய்துள்ளாராம்.

‘காணுமற்போன என் மகன் இவனே’

‘இல்லை; நான் உ. பி.-யில் பிறந்தவன்’

‘ராம லீலா’ நாடகத்தில் விசித்திரக் காட்சி!

அகமதாபாத்—

இங்குள்ள நாடகக் கொட்டகை ஒன்றில் ‘ராம லீலா’ என்ற நாடகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அதில் நடித்த நடிகர் ஒருவர் தான், கடந்த 1947-ல் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தின் போது காணுமற்போன தனது புதல்வன் என்றெண்ணிய 50-வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர், கூட்டத்தை முண்டியடித்துக்கொண்டு மேடைக்குச் சென்று அந்த நடிகரைத் தழுவிக் கொண்டார்.

நடிகரோ, தான் உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், அந்தப் பெண்மணியின் மகன் அல்லவென்றும் கூறினாராம்.

எவ்வளவு கூறியும் அந்த நடிகரை அந்தப் பெண்மணி விட மறுத்து விடவே, நாடகம் கைவிடப்பட வேண்டியதாயிற்றாம்!

போலீஸ் நிலையத்தில், நாடக நிர்வாகி, அந்தப் பெண்மணி, நடிகர் ஆகியோரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு, உத்திர பிரதேச போலீசார், நடிகரின் சொந்த ஊர் பற்றி விசாரித்தறியுமாறு கோரப்பட்டுள்ளார்களாம்.

முதலாளிகள் கழகம்

அந்நிய மூலதனத்தை வரவேற்கிறது

பம்பாய், ஜன. 26—

இந்திய வர்த்தக சபையின் உபகுழு நேற்று கூடி, வெளிநாட்டு மூலதனம் பற்றிய பிரச்சினைகளை விவாதித்தது. டி. எம். பிர்லா, ஜே. ஆர். டி. டாட்டா, ஏ. ராமசாமி முதலியார், துளசிதாஸ் கிலாசந்த், சாந்திலால் மங்களதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்குழு, பொதுவாக அந்நிய நாட்டு மூலதனத்தை வரவேற்றதாம்.

எண்ணெய்த் தொழில், துணி நெசவு, சிமெண்ட், காகிதம் ஆகிய தொழில்களுக்கும், இந்தியாவில் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் கிடைப்பது அரிதாக இருக்கும் தொழில்களுக்கும் அந்நிய மூலதனம் வரவேற்கப்பட்டதாம்.

எகிப்து பிரதமர் பம்பாய் வருவார்

எகிப்து பிரதமரான கர்னல் நாசர், ஜகார்தாவில் நடைபெறும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டிற்குச் செல்லும் வழியில் பம்பாயில் ஒரு நாள் தங்குவார் எனத் தெரிகிறது.

இந்தோ—ஆப்பிரிக்கச் சங்கத்தாரின் அழைப்பின் பேரிலேயே அவர் பம்பாய் வருவதாகத் தெரிகிறது; அதனால், தான் இந்தியாவிடம் கொண்டுள்ள நல்லெண்ணம் வெளிப்படும் என்று கர்னல் நாசர் கருதுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம். ஏ.,